1978 செப்டம்பர் 14]

(ஆ) அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலய பகுதியிலுள்ள அரிசன மக்களிடம் வசூல் கெடுபிடி:

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, "தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம் அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலயம் பகுதியில் குடியிருந்து வரும் தாழ்த்தப்பட்ட மக்களிடம் கெடுபிடியாக பகுதி வசூலிப்பது" என்ற அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவரவர்களே, தஞ்சாவூர் மாவட்டம், நன்னிலம் வட்டம், கோயில் திருமாகாணம் கிராமம் அருள்மிகு மாகாணநாத சுவாமி ஆலயம் அறநிலைய ஆட்சித்துறைக்குட்பட்ட ஆலயமாகும். இவ்வாலயம் இரண்டாம் நிலை செயல் அலுவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இதன் ஆண்டு வருமானம் ரூ. 97,052 ஆகும்.

2. மேற்படி ஆலயத்திற்குச் சர்வே எண். 179/4 பி-ல் 57 செண்டு புஞ்சை நிலம் சொந்தமாக இருந்து வந்தது. மேற்படி 57 செண்டு புஞ்சை நிலத்தில் 1971-ஆம் ஆண்டு குடியிருப்புச் சட்டத்தின் அடிப்படையில் 48 செண்டு நிலத்தை 13 நபர்களுக்கு குடியிருப்புப் பட்டா வழங்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் அரிசன நலத்துறையால் வீடுகள் கட்டித் தரப்பட்டுள்ளது. மேற்படி குடியிருப்புச் சட்ட விதிகளின்படி மேற்கண்ட 48 செண்டு நிலத்திற்கு ரூ. 117.95 நஷ்ட ஈட்டுத் தொகையாக கோயிலுக்கு வழங்கப்பட்டு, மேற்படி தொகை 31—3—1973-ல் ஆலயக் கணக்கில் வரவு வைக்கப்பட்டுள்ளது.

3. மேற்படி 57 செண்டு நிலத்தில் குடியிருப்புப் பட்டா வழங்கப்படுவதற்கு முன்பு மனைப் பகுதி கோயிலால் வசூலிக்கப்பட்டு வந்துள்ளது. அதன்படி 1381 பசலி முடிய உள்ள பகுதி பாக்கி ஆலயக் கணக்கில் நிலுவையாகக் காட்டப்பட்டு வருகிறது. பாக்கிக்கான விபரம் வருமாறு:—

	ரூ.
(1) எல். கலியபெருமாள்	7.50
(2) என். மணியன்	23.70
(3) வி. அம்மாசி	10.34
(4) என். சன்னுசி	3.00
(5) முருகன் மனைவி லட்சுமி	21.34
(6) கா. சின்னையன்	12.00

(திரு. ஆர். எம். வீரப்பன்) [1978 செப்டம்பர் 14

		ரூ.
(7) ச. ஆறுமுகம்	.. ..	19.06
(8) சி. முருகையன்	.. .. ..	11.18
(9) முனியாண்டி மனைவி தயிலி	.. ..	12.34
(10) சி. கோவிந்தன்	.. .. ..	19.00
(11) சு. பக்கிரிசாமி	.. .. ..	17.82
ஆக மொத்தம்	..	157.28

இடம் கோயிலுக்கு தற்போது சொந்தம் எனக் கோரி பகுதி கேட்டு வற்புறுத்தப்படவில்லை. குடியிருப்பு பட்டா வழங்குவதற்கு முன் உள்ள மனைப் பகுதிதான் ரூ. 157.28 நிலுவை உள்ளது.

இந்த நிலுவையைத்தான் ஆலய நிர்வாகத்தினர் கேட்டு வருகின்றனர். குடியிருப்புச் சட்டத்தின் கீழ் பட்டா கொடுக்கப்பட்டு விட்டதால், அவர்களை ஆலயத்தினரால் காலி செய்யும் பிரச்சினையே எழவில்லை. அவ்வாறான நடவடிக்கை ஒன்றும் கிடையாது.

திரு. மா. மணிமாறன் : தலைவர் அவர்களே, நன்னிலம் வட்டம், திருமாகாணத்தில், அரிசனக் குடியிருப்புகளில் இருந்து, அவை கோவிலுக்குத் தொடர்பான நிலம் என்பதால் பகுதி பாக்கியை வசூலித்து, தொந்தரவு படுத்தி வசூலித்து வழக்கு மன்றத் திற்கு அலைக்கழித்துக் கொண்டிருக்கிறார்கள். இப்படி வசூலிப் பது நிறுத்தப்படுமா ?

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் : தலைவர் அவர்களே, இதிலே பட்டா செய்து கொடுத்த அந்த நிலங்களுக்கு எந்த விதமான வசூலிலும் ஈடுபடவில்லை. அதற்கு முன்னால் பாக்கியிருக்கிற சுமார் ரூ. 157.28 வசூலிப்பதற்கு அதிகாரிகள் முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்களே தவிர வேறில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

(இ) பாடப் புத்தகங்களிலிருந்து சில பகுதிகள் நீக்கப் பெற்றுள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : தலைவரவர்களே, இந்த ஆண்டு பாடப் புத்தகத்திலிருந்து தேசியத் தியாகத் தலைவர்களின் சரித்திரங்கள் நீக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.